SUPPLEMENTTOTHE BRAHMAVIDYA

ப்ரம்மவித்தியா பத்திரிகையின்

அநுபந்தம்

புத்௰க] சிதம்பரம் ஏவிளம்பிஸு தைமீ உ௯உக்கு 1898ஸு பிப்ரவரிமீ 6உ [இல ௰௯.

வைதிகசந்திரமௌலி

மஹாபாசுபதாஸ்திரபராவர்த்தனப்பிரயோகம்.

முன்தொடர்ச்சி.

(௧௫) [illegible]

(௧௬) [illegible]

(௧௭) [illegible]

(௧௮) [illegible]

(௧௯) [illegible]

(௨௰) [illegible]

(௨௧) [illegible]

(௨௨) [illegible]

(௨௩) [illegible]

(௨௪) [illegible]

(௨௫) [illegible]

(௨௬) [illegible]

(௨௭) [illegible]

(௨௮) [illegible]

(௨௯) [illegible]

(௩௰) [illegible]

(௩௧) [illegible]

(௩௨) [illegible]

(௩௩) [illegible]

(௩௪) [illegible]

[illegible]

(௬௪) க்ருஷ்ண ஏவ பரம் ப்ரஹ்ம ஸாக்ஷாத்விஷ்ணுரேவ ஸநாதந: | கோ ஹ்யந்யஸ்த்வத்தோ மாஹாத்ம்யம் வேத்தி த்வம் பரம் ப்ரஹ்ம

[௬௫] ஜ்ஞாநமைஶ்வர்யம் திவ்யம் யதாவத்விதிதம் த்வயா | ஸர்வவேதரஹஸ்யஜ்ஞ: ஶ்ரீதேவாவாஸ ஸநாதந: ||

[௬௬] நாராயணோ(அ)பி பகவாந் தேவகீநந்தநோ ஹரி:| அஜோ(அ)நாதிரவ்யய: ஸாக்ஷாச்சித்தத்வாநந்த ரூபத:

[௬௭] ஶுத்தாத்மா கேவலோ ஜ்ஞாநஸ்வரூபோ ரக்ஷக: ஸநாதந: | ஸ்ருஷ்டி ஸ்திதிலய காரண: ஸாக்ஷீ நிரஞ்ஜநோ(அ)வ்யய: பர:||

[௬௮] நித்யஸ்ஸர்வகதோ ஹ்யாத்மா கூடஸ்தோ தோஷவர்ஜித: | ஏகஸ்ஸந்திஷ்டதே ஹ்யாத்மா ஸர்வபாநஸஹாயக:||

[௬௯] தஸ்மாதேவ தமேவாஹுர்முநய: பரமாத்மந:||

[௭௰] ஸோ(அ)யம் வ்யக்தஸ்வரூபேண ஸாக்ஷாதாத்மஸம்ஶ்ரயா||

[௭௧] ஸர்வபூதேஷு பூதாத்மா ஸர்வஸாக்ஷீ ஸர்வவித் ஸர்வ: ஸர்வேஶ்வர: ஸர்வ||

[௭௨] ஸர்வமாத்மைவ ப்ரக்ருதி: ப்ரயாணம் ப்ராணாபாநௌ இவ | விகாராதீதஸ்ஸதா ஶுத்தோ தேவதேவஸ்ஸநாதந: ||

[௭௩] நாஹம் விஶ்வோ ந விஶ்வம் சாத்மா ஹ்யேதத்விதிதம் ஜ்ஞா:|

[௭௪] மாயாநிமித்தமாத்மா ஸ்ருஷ்டி ஸ்வாத்மநி மாயா ஶ்ரிதா

[௭௫] அஹமேவ பரம் ப்ரஹ்ம மத்தோ ஹ்யந்யந்ந வித்யதே | தஸ்மாத் விஶ்வமேவேதம் நிஶ்சிதம் ப்ரஹ்மவாதிபி: ||

[௭௬] ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம ஏகமேவ த்ருஶ்யதே நாநா

[௭௭] அஹம் ஸர்வம் ப்ரஹ்ம பரமாத்மா ஸநாதந:||

[௭௮] பாஹ்யாப்யந்தரே ஸர்வத்ர ஸ்திதம் ஸ்தாவரஜங்கமம் ||

[௭௯] அநாதி மத்யநிதநம் அவ்யக்தம் ததேவாத்மா ஸ்ருஷ்டிர்

[௮௰] தத்தேஜோ ஜகத்க்ருத்ஸ்நம் தச்சிஜ்ஞாய விமுச்யதே||

[௮௧] தஜ்ஜ்ஞாநம் நிர்மலம் ஶாந்தம் நிர்விகல்பம் நிரஞ்ஜநம் | ஶாஸ்த்ராணாம் தத்வேதவித் ப்ராஹு: விமுக்தாத்மா மோக்ஷ:||

[௮௨] வேதாந்தேஷு நாநா ஸர்வஶாஸ்த்ரேஷு ப்ரோக்தம் | தேநைகேநைவ ஸர்வம் ஹ்யேதத் ஸர்வம் ப்ரஹ்ம:||

[௮௩] ஏஷ பாஶுபதோ யோக: பஶுபாஶவிமுக்தயே | ஸர்வவேதாந்த ஸாரோ(அ)யமத்யாஶ்ரமமிதி ஶ்ருதி: ||

[௮௪] ஏதத்பரம் ரஹஸ்யம் ப்ரஹ்மவிதாம் ஸதா: | ஸர்வகர்மாணி ஸந்த்யஸ்ய பிக்ஷாஶீ நிஷ்பரிக்ரஹ:||

[௮௫] வாங்மநோ(அ)பி ததாத்மா தம் ப்ராப்ய ஶரணம் ஶிவம் | ஸந்த்யஜ்ய ஸர்வகர்மாணி ஜ்ஞாத்வா தத்வமேவ ||

[௮௬] பஶ்ய ஸ்வாத்மநா ஸ்வாத்மாநம் ஸம்ப்ராப்தி | நாமரூபாதிஹ்யேதத் ஸர்வம் பஶ்யந் திஷ்டதி:||

(௮௭) ஸ வேத வேத்யோ பகவாந் வேதாந்தே ஸர்வேஶ்வர:||

[௮௮] ஸர்வ வேதாந்தவேதஸ்து தமேவாஶ்ரித்யோச்யதே ||

[௮௯] ஏகைக தக்ஷரம் வேத்ய ஓங்காரம் வேதவ்யயம் || ஸர்வவேத்யம் விஜாநாதி பரமாத்மா ஸநாதந:||

[௯௰] விகாரஹீநம் நித்யம் ச ஆநந்தாத்மாந மவ்யயம்||

[௯௧] ஸர்வம் கர்த்ரு ஸர்வ த்ருஷ்டி த்ருஶ்யம் ... | ஸாக்ஷீ ஸர்வம் கார்யகாரணாதீத ஜ்யோதிர்நிரஞ்ஜந:||

[௯௨] வதந்தி வேதவிதாம் ஸர்வஸாக்ஷிணம் ப்ரத்யகாத்மாநம் ||

[௯௩] தஸ்மாஜ்ஜ்ஞாநமேவ ஹி ஸம்ஸாரஸ்ய பந்த மோசநம் ||

[௯௪] நித்யாநந்தம் ஸர்வம் ஜ்யோதிஸ்ஸ்வரூப: பரம: | ஸர்வம் ஸர்வாதிதேவ கர்த்ரு

ஊஜிதிரேந்யகெ॥

(௯௬) வஸ்யம்தி ஐஷயொவ்யக்தம்மிதீம் ஸூஷூ ஷாத்திகம்। வ்யாபாநம்வ்யக்ர்திம்வாஸெ:காரணம்ஜ் ஞூவாஷிந:॥

(௯௯) தெநாயம் ஸம்மதஸாத்தா கஷூலெ்ஷா விதிராஜந:। ஷாத்தாநதேக்ஷாமம்வ்யூஹ நாவவாலெ்யூ தகவத:॥

[௯௭] வஙகிஹேதூ: வரெணாஷெள ததா ஷூவகிகெவலு:॥

[௯௮] யதாஹேதவ்யயஹாவரே தநெ்யவா நாவஸ்யதி। ததவைவ ஷவிஷாமம் வ்யூஹஸம்வக்ஷ்ய தெவஷா॥

[௯௯] யதாவஸ்யதிவாதாநம்கெவலம்வரரே யக:। ரேயாரேதஹம்ஜமதஜ்ஞம் ததாஷவதி நிவக்ய த:॥

[௧௦௦] யதா ஜநஜாநாநாவ்யாயீநாரேகஹெ ஷஜம்। கெவலம்வ்யூஹவிஜ்ஞாநம் ஜாயதெஷெள த தாஸிவ:॥

[௧௦௧] தஷாவிஜ்ஞாநவேவாஷி நவ்யவம்வொ நஸம்ஷிதி:। ஈஜ்ஞாநெநாவ்யதம் ஷொகெவிஜ்ஞாநம் தெநாஹ்யதி॥

[௧௦௨] விஜ்ஞாநம் நிதேஷம் ஷலக்ஷம் நிவிக்ஷம் தஷவ்யயம்। ஈஜ்ஞாநநிதாஷவக்ம் விஜ்ஞாநநிதிதநதம்॥

ஐப மேற்கண்ட வசனங்கள் 102 ல் Iமுதல் 19 வசனம் வரையில் தந்திர தாந்திரிக நிந்தையாய் எழுந்தன. அவற்றுள் 1-வது, வாமர், பாசுபதர், பாஞ்சராத்திரிகள் இவர்கள் கலியிற்பிறப்பார் என்று நிரூபித்திருக்கிறது, 2·3 வசனங்கள் வைதிக கன்மலோபம் மலியும் கலியுகத்தில் இவர் பிறப்பர் என நிரூபிக்கப்படுகிறது. 4ம். வசனம் ஸ்பஷ்டமாய் அகௌதமசாபக் கிரஸ்தா வைதிகபாஷண்டர் கலியிற் பிராம்மணகுலத்தில் பிறப்பார் என்றுநிரூபித்தது. 5. 6. பாசுபதர்களை யேநிந்திப்பதாயுளது. மேல் ஆறு ஏழுஎட்டு ஒருவாறு இவரே சூதசங்கிதை முதலிய புராணங்கள் விலக்கிய பைடாலவிர்த்திகர் என்றும் வேதபாஹ்யர் என்றும் நிரூபித்தன. 9, 10 வசனங்கள் அவர் சிவகோபபாத்திரர் எனவும் வேதம் தவிர மற்றநூல்கள் பரமேசுவரனுக்குக் கோபஹேதுவாம் எனவும் அவ்விதம் வேத விரோத நூற்பயின்றய்பவர் வேதபாஹ்யர், நரகமடைவார் எனவும் வரைந்தன. 11, 12 அந்தோ! வேதபாஹ்யவிருதம் கொண்டமையால் பிராம்மணஜாதிப் பிரம்சமும் வருமெனவும் அப்பாவத்துக்கேதுவும் சாஸ்திரங்களிற் பிராயச்சித்தம் கிடையாது எனவும் மொழிந்தன. 13. வேதாங்கபுராணாதிகளிற் சொல்லியபடி அனுஷ்டிக்காது அவைகளைப் புறங்கணிப்பவர் கொடிய நரகம் பெறுவார் என்றது. 14. வேத வேதாங்க புராணாதிகளில் சொல்லப்படாத லௌகிகப்பாவினங்களால் ஈசனைத்துதிக்கக் கூடாதென்று விளக்கியது. 15ம் வசனமோ, புத்தர்முதலிய வேதபாஹ்யருடன் பாஞ்சராத்திர பாசுபதாதி பாஷண்டர்களைப் பிதருகாரியாதிகளில் விலக்கியது. 16. இந்த நிந்தித வேதபாஹ்ய பாசுபதத்தினும் வேறுவைதிக பாசுபதம் உண்டென நிரூபித்தது. (அதுகாமிகாதிகளிலும் வேறு என்றது சிவபுராணம்) 17, 18 19. இவை ஸ்பஷ்டமாய் ஸ்ரீபரமசிவனே அவைதிகதந்திரங்களான வாமஸோம பாசுபதலாகுளாதிகளைச் சிருஷ்டித்தார் என்றும், அவை வேத பாஹ்யங்கள் என்றும் மோஹசாஸ்திரங்கள் என்றும் நிரூபித்தன. 20. ல் வேதத்தாலன்றி மற்றையவற்றால் பரமசிவஸ்வரூபஞானம் உண்டாகாதென காட்டப்பட்டது. 21, 22. வது களில் சுசீலமகாராஜன் ஸ்ரீ ருத்திர ஜபபலத்தால் சூரியமண்டலத்தையடைந்து அதன் வழியிலே ஸ்ரீபரமேசுவர சாயுஜ்யம் பெற்றான் என்றன. 23. வது வசனமோ, கலியில் ஸ்ரீருத்ர மூர்த்தியே ஸ்வாம்சத்தாலவதரித்து ஸ்பஷ்டமாய் வேதவேதாங்கப் பிரதிஷ்டை செய்வார் என்றும் ஸ்மார்த்தத்தை ஸ்தாபித்தருள்வார் என்றும் ஸ்பஷ்டமாய் ஜகத்குருநாதன் அவதாரத்தை (சிவரகஸ்யம் போலக்) குறித்தது. 24. ல் அந்த வேதாந்த மார்க்கத்தைப்பற்றியொழுகும் புண்ணிய சிலரே கலிதோஷங்களை யகற்றிக் கைவல்யம் பெறுவார் எனப்பட்டது. 25. ல் ஸ்பஷ்டமாய் வைதிகபாசுபத பீஜம் பிரணவமே எனப்பட்டது. 26. ல் வைதிக பாசுபதர் பிரணவத்தையே ஜபிப்பவர் என்றும், 27. ல் அப்பிரணவமே சிவ வாசகமுக்தி பீஜம் என்றும் விளங்குகின்றது. 28, 29. இவைவேதத்தானே சிவனை யறியவேண்டும் என வற்புறுத்துகின்றன. 30. உத்தமவருணத்தவர்க்கு வேத மந்திர ஜபமே யுரியதென காட்டியது. 31. வேத வேதாங்க மஹாகாயத்ரீ ருத்திரம் முதலிய வைதிக மந்திரங்கள் இவைகளே ஜபிக்கற்பாலனவென நிரூபித்தது. 32, 33. இவை வைதிகமந்திரம்; குகையை நன்குணர்த்துகின்றன. 34. பக்திபாவனர்களை விசேஷித்து நிரூபிக்குமிடம் வைதிகரையே கொண்டாடியது. 35. பிதிருதினாதிகளில் கேட்பிக்கவேண்டியது வேதாதிகளே என்றது. 36, 37, 38, 39 இவை சிரௌத ஸ்மார்த்தங்களையே புகழ்கின்றன. 40. இந்த வசனம் வைதிகருக்குச் சம்மதமான எதுவும் தருமமாகாதென ஓதுக்கியது. 41, 42, 43, 44, 45, 46 இவைகள் சிரௌத ஸ்மார்த்தங்களையும் புராணங்களையும் தோத்திரஞ்செய்து அவையே யனுஷ்டிக்கற்பாலன வென்று காட்டி நாட்டுகின்றன. 47, 48, 49. இவை வைதிகர்களே பாசுபதர் எனவும் அவர் ஆகமங்களல்லாத வேதங்களையே கொண்டொழுகுபவர் எனவும் நிரூபித்தன. 50, 51, 52, 53, 54 இவை விசதமாய் பரமேசுவரன் வேதமூர்த்தியெனவும் அவரை வைதிகமந்திரங்களைக் கொண்டே வழிபடவேண்டும் எனவும் நியமிக்கின்றன. 55, வைதிக

தருமத்தைவிட்டகன்றவர்செய்யும் தீர்த்தயாத்திரை பயனற்றதென்றது. 56. சிவன் வேதவேத்யன், வேதரக்ஷகன், பிரம்மணன் என்றது. 57-ல் வேதாகமங்கள் வெவ்வேறு சாஸ்திரங்களாம் எனப்பட்டது. 58, 59 இவை புராணங்களைப் புகழ்ந்தன. வேதவித்தையையும் புகழ்ந்தது. 60, 61, 62, 63, 64 இவற்றில் யாக்ஞவல்க்யர், வியாஸர், அர்ஜுனன், கிருஷ்ணன் முதலிய சிவபக்தர்கள் அளவிலாது புகழப்பட்டன. 65, 66. இவற்றில் ஸ்ரீ பகவத்கீதை பெரியதோர் சிவசாஸ்திரம் எனவும், அதை ஸ்ரீ கிருஷ்ணன அர்ஜுனனுக் குபதேசித்தா ரெனவும் கீதா சாஸ்திரம் புகழப்பட்டது. 67. அத்துவிதாத்ம சொரூபம் சொல்லப்பட்டது. 68. கூடஸ்தாத்மைக்யத்தைக் குறித்தது. 69, 70, 71, 72. இவைகள் ஸ்பஷ்டமாய் பேதவாசனையே பந்தமெனவும் ப்ரம்மமன்றி மற்றது மிச்சையெனவும், அத்துவித சித்தாந்தமே உண்மையெனவும் நாட்டின. 73, 74, 75 இவைகளில் சிவனன்றி பொருள் வேறில்லை யென்றும் பிரம்மமே உலகோபாதான மென்றும் மாயை நிமித்தமாத்திரமே என்றும் நிரூபிக்கப்பட்டது. (இது ஆகமங்களுக்கு நேர்விரோதம்) 76, 77, 78, 79, 80, 81 இவற்றில் அதிப்பிரகாசமாய் அவித்தையின் சொரூபமும் பேதப்பிரபஞ்ச வியலும் ஆத்மவஸ்துவே ஸத்யமென்பதும் நிரூபிக்கப்பட்டது. 82, 83 இவைகளில் அத்யாச்சிரமம் என்பது அக்னிஹோத்திர பஸ்மதாரண விரதமே ஸந்நியாஸிகளுக் குரியதெனப் புலப்பட்டது. 84, 85. இவை அத்யாசிரம சந்நியாஸத்தையும் அதைப்பெற்றவரையும் புகழ்ந்தன. 86, 87, 88, 89 இவைகள் வேத வேதாங்கங்களே சிவனை யடைவிக்கும் சாஸ்திரங்கள் என்றன. 90, 91, 92, 93, 94, 95 இவைகளில் ஏகாத்தும வாதமும், ஸம்ஸாரம் அஞ்ஞானமூலம் என்பதும், ஆத்தும தரிசனமே முக்தி என்பதும் விரிக்கப்பட்டது. 96, 97, 98, 99, 100, 101, 102 இந்த வசனங்களில் 'பிரம்மமே சத்தியம், மற்றது மிச்சை, இவ்வறிவே மோக்ஷஹேது, மோக்ஷம் கேவலாத்துமா பரோக்ஷஞானமே, பிரபஞ்சம் முக்தனுக்குச் சூன்யமே என்று' கேவலாத்துவித சித்தாந்தம் நாட்டப்பட்டது.

இன்னும் வரும்.

அத்வைதவிளக்கம்.

முன்தொடர்ச்சி.

நூற்றுப்பதினோராவது சுலோகத்தில்
க்ஷ்வா நயேவ்வதிம்

என்று தொடங்கி உபநயனாதி வைதிக ஸம்ஸ்காரமே அத்வ சுத்தியாகு மென்றார்.

நூற்றுப் பன்னிரண்டாவது சுலோகத்தில் ரிஷிகளாலே செய்யப்பட்ட கற்பசூத்திரங்களைப்போல் உமது ஆகமங்களும் பிரமாணமென்றும் அதி சிஷ்டர்கள் கொள்ளாமையால் குற்றமுள்ளதெனக் கூறலாகா தென்றுங் கூறினார்.

நூற்றுப் பதின்மூன்றாவது சுலோகத்தில் ரிஷிகள் ஒவ்வொரு மந்திரத்தையுந் தனித்தனியே கண்டதுபோல, நீர் எல்லா மந்திரங்களையும் ஒருங்கே கண்டவராதலால், நீர் மகரிஷி யென்றார்.

நூற்றுப் பதினாறாவது சுலோகத்தில்
வெடோவ்வப்ரூஹண

என்ற தொடங்கி வேதோபப் பிரம்மணங்களாகிற புராண வசன கோடிகளால் உமது பூஜையின் அளவிலாப் பெருமை விளக்கப்பட்டிருக்க அப்புராணங்களால் உபப் பிரம்மணஞ் செய்யப்பட்ட வேதத்தை மூலமாகக் கொண்ட தந்திரங்களாற் பயனேது? பெருங்காற்று அடிக்குங்கால் விளக்கை யணைக்க வாயால் ஊதப்படுங் காற்றைத் தேடுவானேன் என்றார்.

இதனால் இப்பூர்வ பக்ஷியாரது மாறுபாடு தெளிவு பெற விளங்கவில்லையா? இத்தகைய விவர் குணப்படுவது முண்டோ? இவர் கொண்டுவந்த தப்புப்பாடல் (அவ்வாதத்தருடைய பாடலென்றாலும் மற்று எவர் பாடலென்றாலும்) சதுர்தச வித்தைகட் குட்பட்ட சுருதி ஸ்மிருதி புராணேதிகாசங்களுக்கு விரோதமாயிருத்தலின் அது பிரமாணமாகாதென்று விடுக்க. இவர் இன்னநூல்களைப் பிரமாணகக்கொண்டு வாதஞ் செய்யவேண்டுமென்ற முறைமை தெரியாதவராகலின், இவரது வாதநெறி முறைமையினின்றும் விலகிய வாதநெறியாமென்று கூறி மறுக்க.

'ஆயின் நஞ்சைவப்பெரியோர் சரியைக்கழற்றி, கிரியைக்கழற்றி முதலியபேர்களிட்டு அவைகளைத் தூஷித்திடல் யாங்ஙனம்?' என்று அத்வைதியார் வினவியதாக வெழுதி அதற்குவிடை 'சரிதாதிநான்கினுக்குஞ் சாலோகமாதி வருமா றெமக் களித்த வள்ளல்' என்று அப்பெரியோரே கூறினராகலானும், 'விரும்புஞ்சரியைமுதல் மெய்ஞ்ஞானநான்கு மரும்புமலர் காய்கனிபோலன்றோ பராபரமே' என்று தாயுமானச் செல்வனார் கூறினாராகலானும் சரியையாதிகள் தூஷிக்கப்பட்டவாறில்லை கண்டீர்'

என்றார். சரியையாதிகளைத் தூஷித்ததாக அத்வைத தூஷண நிக்கிரகமென்னும் நூலிலாயினும், வேறெந்த வேதாந்த சாஸ்திரங்களிலாகினும் காட்டமுடியுமா? முடியாதாக, இவர் மற்றோரிடத்தில் 'சரியையாதிகளைத் தூஷிக்க வெழுந்த நீரும் நும்மினத்தவரும் எப்படிப் பிழைக்கப் போகிறீர்களோ?' என்றெழுதியது என்னோ! ஆனால் சரியையாதிகள் ஞானத்திற்குக் கீழாயினவென்றும், ஞானத்தை யடைவதற்குச் சாதனமா யுள்ளவையென்றும் ஷை நூல்கள் கூறுகின்றன; அவ்வாறு கூறுவதினால் அது தூஷித்ததாக முடியுமா? முடியுமென்னின், அப்போது

பிரமகீதை சாந்தோக்கிய உபநிஷத்.

சிவனேயுள்ளான்பிறிதில்லையென் றுதிறமாயறிவதுவே
பவமேயொழிக்கும்பரமார்த்தம்பகருநெறிதானதுவாகும்
அவமேயிதனையொழிந்துளதாம்அவைதானிதனையடைதற்குத்
தவமேமுதலாஞ்சரிதைகளைச்சாற்றுகின்றதன்மையவே. (95)

என்றும்,

வாதுளாகமம் நிஷ்டானுபூதி.

ஒருமொழியாலே சரியைநற் கிரியாயோக பாவனையெலா மொழியும். (௨)

என்றும்,

புத்திகொள் கிரியாயோக சாதனையைப் புரிந்திடுபவர்க ளிவ்வுலகில் எத்தனைகால மிருப்பினு மீண்டு மிறப்பொடு பிறப்பினையடைவார். (௯௫)

என்றும்,

திருமூலர் திருமந்திரம்.

ஞானத்தின்மிக்க தவநெறி நாட்டிலில்லை.

என்றும்,

பட்டினத்தடிகள்.

வெட்டாதசக்கரம்பேசாதமந்திரம்வேறொருவர்க்
கெட்டாதபுட்பமிறையாததீர்த்தமினிமுடிந்து
கட்டாதலிங்கங்கருதாதநெஞ்சங்கருத்தினுள்ளே
முட்டாதபூசையன்றோகுருநாதன்மொழிந்ததுவே.

என்றும்,

உளியிட்டகல்லையும் ஒப்பிட்டசாந்தையும் ஊத்தையறப்
புளியிட்டசெம்பையும் போற்றுகிலேன்.

என்றும்,

சிவவாக்கியர்பாடல்.

காணவேண்டுமென்றுநீர்கடன்மலைகளேறுவீர்
ஆணவமதல்லவோவறிவிலாதமாந்தரே.

என்றும்,

தீர்த்தலிங்கமூர்த்தியென்றுதேடியோடுந்தீதரே
தீர்த்தலிங்கமுள்ளில்நின்றசிவனைத்தெளியுமோ
தீர்த்தலிங்கமும்முளேதெளிந்துகாணவல்லீரேல்
தீர்த்தலிங்கந்தானமாய்ச்சிறந்ததேசிவாயமே.

என்றும்,

நித்தலுமணிதுலக்கிநீடுமூலைபுக்கிருந்து
கத்தியேகதறியேகண்கள்மூடியென்பயன்
எத்தனைபேரெண்ணினுமெட்டிரண்டேபெத்தலோ
அத்தனுக்கிதேற்குமோவறிவிலாதமாந்தரே.

என்றும்,

குண்டலங்கள்பூண்டுநீர்குளங்கடோறுமூழ்கிறீர்
மண்டுகங்கள்போலநீர்மனத்தின்மாசறுக்கிலீர்.

என்றும்,

கூறியவைகளும் பழித்தனவாம். இவைகள் சரியையாதிகளைப் பழித்தனவல்ல, ஓர் நிமித்தம் பற்றி யவ்வாறு கூறி யிருக்கின்றன வென்னின், அப்போது அத்வைத தூஷண நிக்கிரக நூலில் எடுத்துக்காட்டாகக் காட்டியிருக்கின்ற

'மோட்ச இச்சையுள்ளவனுக்குப் பாஷாணம், உலோகம்; மணி, மண் இந்த ரூபமான விக்கிரகங்களிலே செய்யும் பூசையானது புனர்ஜனனத்தையும் போகத்தையும் கொடுக்கத்தக்கது. ஆகையால் யதியானவன் மறுபடியும் ஜனனத்தை யடையாதிருக்கும்பொருட்டுத் தன்னுடைய ஹிருதயார்ச்சனையே செய்ய வேண்டியது. வெளி யார்ச்சனையைத் தள்ளிவிட வேண்டியது.'

இம் மைத்திரேயோபநிஷத் வசன மாத்திரம் சரியையாதிகளைத் தூஷித்ததாகுமோ? ஆகாதாகா தாகலின், இஃதறியாது அத்வைத தூஷணநிக்ரகநூலார் சரியையாதிகளைத் தூஷித்தார் தூஷித்தார் என் றிப்பூர்வ பக்ஷியார் கூறிய கூற்றுப் பயனில் கூற்றாமென விடுக்க. மேல் இவர் காட்டிய ஒழிவிலொடுக்கச் செய்யுளும், தாயுமானவர் செய்யுளும் சாதன சதுஷ்டயம் சரியையாதிகளுக்குக் கீழாயினதென்றும், நேர் சாதன மன்றென்றும் கூறாமையின் அப்பாடல்களினு லிவர்க் கேதும் பயனின்றாமென்க. இனி முதலில் 'சரியாதி நான்கினுக்கும் சாலோகமாதி வருமாறெமக் களித்த வள்ளல்' என்று கூறியுள்ள ஒழிவிலொடுக்கத்தின் அபிப்பிராயமும் அதன் உரை யாசிரியரது அபிப்பிராயமும் சரியை யாதிகளைப் பற்றி யெவ்வாறு இருக்கின்றனவென முன்னர் ஆராய்ந்து, பின்னர்த் தாயுமானவர் பாடலைப்பற்றி யாராய்வாம்.

ஒழிவிலொடுக்கம் பொதுவிலுபதேசத்தில்
தன்னையறிவார்க் கெதிருந்தாலும் பயனுமில்லை. (௨௯)

என்றும்,

உனையறிவென் றுள்ளேயுணர். (௩௨)

என்றும்,

பழுதையைப்பாம்பென்றபயம்போனாற்பாவித்
தழுதுடம்பையாட்டுகினுமாமோ. (௩௫)

என்றும்,

தம்மாலறிந்ததெல்லாந்தாமல்லவென்றுரைத்தால்
சும்மாவிருப்பதுவாய்த்தோன்றாதோ. (௩௭)

என்றும்;

மோனம்வேதாந்தமுடிவு, (௪௧)